தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. { ருத்திரோத்காரிஸ்ரீ புரட்டாசிமீ { பகுதி 6

Bridges.

பாலங்கள்

ஸ்ரீமான் K. சுப்பிரமணிய ஐயர், B. E. எழுதியது.

(VII-ம் தொகுதி. 82-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிரூக்லின் ஊஞ்சற் பாலம் ந்யூ யார்க்கில் கிழ் நதியின் மேல் கட்டப்பட்டுள்ளது. 1595½ அடி யகல நடுக்கண் வாயும் 930 அடி யகலமுள்ள இரண்டு பக்கக் கண்வாய்களும் உள்ளது (படம் 8) பாதை 85 அடி யகல முள்ளது. அதில், நடந்துபோகிறவர்களுக்கு வேறிடமும், இரண்டு ரயில்பாதைகளுக் கிடமும், இரண்டு வண்டிப் பாதைகளுக்கு மிடமும் இருக்கின்றன (படம் 9). இந்தப் பாதை நான்கு உருக்குக் கம்பி வடங்களால் தாங்கப்படுகிறது ஒவ்வொருவடமும் 15¾ அங்குலம் கனமுள்ளது. ஒன்றேகாலடி கனமுள்ள இரும்பு வடம் எப்படி யிருக்குமென்று நினைத்துப் பார்க்க வேண்டும். வடங்களின் மத்தி தொய்வு 128-அடி. ஒவ்வொரு திண்டின் மேலும் நூற்றெட்டு உதவிக் கயிறுகள் ஓடி நடுக் கண்வாயி

லும் பக்கக் கண் வாய்களிலும் பாதையைத் தாங்குகின்றன. நதியின் வெள்ளஜல மட்டத்துக்கு 135-அடிக்குமேல் பாதையிருக்கிறது. ஒவ்வொரு வடத்திலும் 5296 கம்பிகள் அடுக்காய் கட்டப்பட்டிருக்கின்றன:—பத்தொன்பது சிறு கட்டுகளைச் சேர்த்து ஒரு பெரிய கட்டாய்க் கட்டப்பட்டவை. கோபுரங்களின்மேல் ரோதைகளில் தாங்கப்படும் சேணங்களிருக்கின்றன. நங்கூரக் கயிறுகள் 23 டன் கனமுள்ள இரும்புத் தகடுகளில் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகடுகள் 60,000 டன் கனமுள்ள கட்டுமானங்களில் நேர் மட்டமாய்ப் புதைக்கப் பட்டவை. பாதையைப் பிரிப்பதற்கு ஆறு இரும்புச் சட்டங்கள் பால முழுதும் இருப்பதனுல் ஆட்டம் குறைந்து விரைப்பு அதிகரிக்கிறது. $7\frac{1}{2}$ அடிக் கொன்ருய் உள்ள (பாதையைத் தாங்கும்) குறுக்கு கர்டர்கள் சட்டங்களின் அடிப்புறத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாலத்தின் கனம் 14,680 டன் அதில் ஓடக்கூடிய பாரத்தின் கனம் 3100 டன்தான். அதைக் கட்டியவிதம் ஆச்சரியமானது. அதற்கு பூமி விலையைத் தவிர 24,37,500 பவுன்கள் செலவாயிற்ரும்.

நியூ யார்க்கிலுள்ள வில்லியம்ஸ்பர்க் ஊஞ்சற்பாலம் (Williamsburg Suspension Bridge) 1600 அடி நடுக்கண்வாயுள்ளது. பாலத்தின் அகலம் 118 அடி. அதில் இரண்டு ரயில்பாதைகளும், நான்கு ட்ராலி வண்டிப் பாதைகளும், இரண்டு வண்டிப்பாதைகளும் இரண்டு நடைப்பாதைகளும், இரண்டு துவிசக்கரப் பாதைகளும் இருக்கின்றனவாம் $18\frac{3}{4}$ அங்குல கனமுள்ள நான்கு உருக்கு வடங்கள் உபயோகிக்கப்பட்டன. அதே நகரிலுள்ள மான்ஹாட்டன் (Manbattan) ஊஞ்சற்பாலம் 1470 அடி நடுக்கண்வாயுள்ளது. ஒரு நங்கூரத்திலிருந்து மற்றது வரை 3000 அடி நீளமுள்ளது, ஜல மட்டத்துக்குமேல் 135 அடி உயரமுள்

ளது. பக்கக் கண்வாய்கள் 725 அடி பாலத்தில் நான்கு ரயில் பாதைகளும் நான்கு ட்ராலி வண்டிப்பாதைகளும் ஒரு வண்டிப்பாதையும் இரண்டு நடை பாதைகளும் இருக்கின்றனவாம். கோபுரங்கள் 291 அடி உயரம். கோபுரத்தில் 134 அடிக்கும் 68 அடிக்கும் சதுரமான கட்டிடத்தின் மேல் 5000 டன் கனமுள்ள உருக்குக் கம்பி இருக்கிறது.

சில பாலங்களில் ஆட்டத்தைக் குறைப்பதற்குப் பாதையில் மாட்டப்பட்ட குத்துக் கம்பிகளையும் கோண உறுப்புகளால் ஒன்றோடொன்று சேர்த்துச் சட்டம்போல் செய்வதுண்டு. பிரான்சிஸ் ஜோஸெப் (Francis Joseph) பாலத்தில் உதவிக் கயிறுகளுக்குப் பதிலாக கோணலான கர்டர்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பாதை உதவிக் கர்டர்களிலிருந்து மட்டுந்தான் தொங்குகிறது. உதவிக் கர்டர்கள் கயிற்றிலிருந்து தொங்குகின்றன. (படம்-10) ஆல்பர்ட் பாலத்தில் (Albert bridge) பாதை கயிற்றிலிருந்தும் உதவிக் கர்டர்களிலிருந்தும் தொங்குகின்றது (படம்-11) ஆட்டத்தைக் குறைப்பதற்குக் கயிறுகளையே விரைப்பாக்குவதும் உண்டு. இதற்கு இரண்டு வடங்களை ஒன்றுக்கு சற்றுமேல் மற்றொன்றாய்த் தொங்கவிட்டு இரண்டையும் சட்டம்போல் பின்னிச் சேர்ப்பார்கள் அல்லது கயிற்றுக்குப பதிலாக இரண்டு சட்டங்களையே கோபுரங்களிலிருந்து தொங்கவிடுவார்கள். சட்டங்கள் மத்தியில் ஒன்றோடொன்று சேரும். அவற்றிலிருந்து பாதைதொங்கும். சட்டத்தின்கீழ் விளிம்பு சங்கிலியாயிருக்கும். இதை மானங்க ஹேலா (Monongahela) நதியின் மேலுள்ள பாலத்திற் காண்க. (படம் 12)

சேணங்களுக்கு அசைய இடங்கொடாமல் பதித்தால், விசை கோபுரங்களைப் புரட்டப்பார்க்கும் கனக்குறைவினால் ஊஞ்சற் பாலங்கள் காற்றில் அலையும். இப்படி அலைய்



வொட்டாமல் கோபுரத்தின் அடிவாரத்துக்கும் எதிர்ப்புறத்தில் பாதையின் நுனிக்கும் கயிறு கட்டுவதுண்டு. அது தவிர கண்வாய்க்கு வெளியே ஆடாமல் கயிறுகளால் பாதையை நதிக்கரையுடன் கட்டுவதுமுண்டு.

திருவாங்கூரிலுள்ள புனலூர் (Punalur) என்னுமிடத்தில் ஒரு சங்கிலிப் பாலமிருக்கிறது. ரயிலில் புனலூருக்குப் போகிறவர்கள் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள ரயில் பாலத்திலிருந்து பார்த்தால் இப்பாலம் தெரியும். மலைகளுக்கும் காடுகளுக்கும் இடையில் இது அழகாய் அமைந்திருக்கிறது. பெரியகுளத்துக் கருகிலும் ஒரு ஊஞ்சற்பால மிருந்தது. சமீபத்தில் ஒரு வெள்ளத்தில் அது அழிந்து போய்விட்டதாய்ச் சொல்லுகிறார்கள். வேறு தமிழ் நாட்டில் இவ்வகைப் பாலமிருப்பதாய் எனக்குத் தெரியாது.

கயிறுகளையும் சங்கிலிகளையும் மத்தியில் தொய்வில்லாமல் ஏன் கட்ட முடியாது என்று சிலர் கேட்கலாம். தொய்வில்லாமல் கட்ட முடியாது. தொய்வைக் குறைக்கக் குறைக்கக் கயிற்றில் விசை அதிகப்பட்டு முடிவில் அது அறுந்து போகும். கயிறு கனமில்லாத வஸ்துவாயிருந்து அதில் ஒரு பாரத்தையும் தொங்கவிடாமலு மிருந்தால் தொய்வில்லாமல் அதை நேர் மட்டமாய்க் கட்டலாம். ஆனால் கனமில்லாத வஸ்து எது ? கண்ணுக்குத் தெரியாமலும் கையில் எடுக்க முடியாமலும் இருக்கும் காற்றுக்கே கன மிருக்கிறது. ஆகையால் கயிற்றைத் தொய்வில்லாமல் கட்டமுடியாது.

பெஜவாடா (Bezwada) அணைக்கட்டிலிருந்து அண்ணாந்து பார்த்தால் கிருஷ்ணா நதியின்மேல் மெல்லிய நூல்போலொன்று பெஜவாடா மலையிலிருந்து எதிர்க் கரையிலுள்ள ஸீதா நகரமலைக்கு ஓடுவது தெரியும். கிருஷ்ணாவில் பாலம் கட்டுமுன் பெஜவாடாவிலிருந்து எதிர்க்கரைக்கு 'டெலிபோன்' பேசுவதற்காகப் போட்ட கம்பி அது. அதன் கண்வாய் சுமார் 4000 அடியிருக்கும் அதன் தொய்வு 150 அடி என்று சொல்லுகிறார்கள். உலகத்தில் மிக வகன்ற கண்வாய்களில் கட்டப்பட்ட கம்பிகளில் அது ஒன்று.

II

ஆர்ச்சுப் பாலம்.

ஆர்ச்சுப்பாலமென்பது ஊஞ்சற்பாலத்துக்கு எதிரிடையென்று முன்னே சொன்னோம். அதுவும் அபூர்வ வகுப்பைச் சேர்ந்ததுதான். ஆனால் செங்கல் கல் முதலிய பொருள்களால் ஆர்ச்சுக்கட்டினால் அதில் இறுக்குவிசையைத் தவிர வேறொன்றும் வராதபடி பாாத்துக் கொள்ளவேண்டும். இரும்பு ஆர்ச்சுகளில் அது அவசியமில்லை. இரும்பு இழுவிசையையும் இறுக்கு விசையையும் தாங்கும். அதை இழுத்து அறுப்பதும் கஷ்டம், நசுக்குவதும் கஷ்டம். பெரிய ஆர்ச்சுகளுக்கு இக்காரணத்தாலும் கற் கட்டுமானத்தைவிட கனம்குறைவான படியாலும் இரும்பு உபயோகிக்கப்படுகிறது. முன் காலங்களில் ஒழுக்கறையே பெரும்பாலும் ஆர்ச்சுகளுக்கு உபயோகப்பட்டது. ஒழுக்கறை இறுக்குவிசையை விட இழுவிசைக்குபலம் குறைந்திருப்பதால் தற்காலங்களில் சுத்த இரும்பும் உருக்கும் அதற்குப்பதிலாக ஆர்ச்சுக்கு உபயோகிக்கப்படுகின்றன.

ஸெண்ட் லூயி பாலம் (St. Louis Bridge) 502 அடியும் 520 அடியும் 502 அடியும் அகலமுள்ள மூன்றுகண்வாய்களுள்ளது. (படம்-13) ஆர்ச்சுகளின் உயரம் 47-அடி. இது தான் முதல் முதலாக உருக்கை உபயோகிக்கப்பெற்ற ஆர்ச்சுப்பாலம். இதில் உருக்கில் சதுர அங்குலத்துக்கு $12\frac{3}{4}$ டன் இறுக்குவிசையும் 10 டன் இழுவிசையும் வருவதாய் மதிப்பிடப்பட்டது. ஒவ்வொரு கண்வாயிலும் நான்கு ஆர்ச்சுச் சட்டங்களிருக்கின்றன. ஒவ்வொரு சட்டத்திலும் $1\frac{1}{2}$ அடி அகலமுள்ள இரண்டு உருக்குக் குழாய்களை ஒன்றுக்கு 12 அடி மேலே இன்னொன்றாகவைத்து கோணலுறுப்புக்களால் பிணைத்திருக்கிறார்கள். பாலத்துக்கு 13,61,800 பவுன்



செலவாயிற்றும். ஓரிருப்புப்பாதையும் ஒருவண்டிப்பாதையும் அதன் மேல் இருக்கின்றன.

பாலத்தைப் பள்ளத்தாக்குக்கு மிக உயரத்தில் அமைக்க வேண்டியிருந்தால் ஆர்ச்சுச் சட்டத்தை இளம்பிறை வடிவ

மாய்ச் செய்வதுண்டு. செங்கலார்ச்சுகளில் உச்சியிலிருந்து உற்பத்திஸ்தானம்வரை ஆர்ச்சு கனம் அதிகரித்துக்கொண்டு வரும்போது இளம்பிறைச்சட்டத்தில் மட்டும் குறைந்துகொண்டுவருவது பலக்குறைவு அல்லவா என்று கேட்கலாம். சட்டமாயிருப்பதால் உயரத்தை அதிகப்படுத்தாமலே உறுப்புகளை மட்டும் பெரிதாக்கி வேண்டிய பலத்தை யடையமுடியும் என்பதுதான் இவ்வாக்ஷேபணைக்கு சமாதானம். செங்கலார்ச்சில் பொருள் அடர்ந்திருக்கிறது. அதன் தொகுதியால்தான் பலம் கிடைக்கிறது. அதன் கனத்தை அதிகப்படுத்தாமல் பலத்தை அதிகப்படுத்தமுடியாது. சட்டத்தில் பொருள் தொகுதியாய் நிற்கவில்லை. பிரிந்திருப்பதனால் சட்டத்தின் உயரத்தைக் குறைக்கினும் பலத்தை அதிகப்படுத்தமுடியும். படங்களில் எங்கும் சம அகலமுள்ள ஆர்ச்சுச்சட்டத்தையும், மேலிருந்து கீழே வர வர கனம் குறையும் இளம்பிறைச் சட்டத்தையும் பார்க்கவும். (படங்கள்-14, 15)

இரும்பார்ச்சு வெயிலிலும் பனியிலும் நீளும் அல்லது குறுகும். உற்பத்தி ஸ்தானங்களில் அதை அசைய வொட்டாதபடி நிலையாய் வைத்துப் பதித்துவிட்டால் நீளவும் குறுகவும் இடமின்றி இரும்பு வருந்தும். மற்றவஸ்துக்களுக்கிறுப்பதுபோல் அதற்குமுள்ள துவட்சியால்-தன் நிலைமை கெடாது காத்துக்கொள்ளும் சக்தியால்-தான் அது அப்படி வருந்தும்போது வரும்விசைகளைத் தாங்கவேண்டும். உற்பத்திஸ்தானங்களில் கீல்கள் வைத்துவிட்டால் சட்டம் நீளும் போதும் குறுகும்போதும் அவற்றின் மேல் சிறிது திரும்பி நிமிரும் அல்லது குனிந்து கொள்ளும். இப்படித்திரும்ப இடங்கொடுப்பதற்கு ஆர்ச்சின் மூனைகளை உருக்கு ரோதைகளின்மேல் தாங்கும்படி வைப்பதே சிறந்த வழி. வேறு வழிகளிருக்கின்றன என்றாலும் அவைகள் அவ்வளவு சிலாக்கியமில்லை ஆர்ச்சின் உச்சியிலும் சிலர் கீல் வைப்பார்கள்.

ஆழமான பள்ளத்தாக்கில் சாரமின்றிக் கட்டக்கூடிய சௌகரியமே இரும்பார்ச்சுப் பாலங்களின் முக்கிய அனுகூலம். சாரமின்றிக்கட்டும் வகை 16-வது படத்தில் தெரியும். ஸெண்ட் லூயி பாலம் கட்டினவிதம் அதில் காட்டப்பட்டிருக்கிறது. பாலத்தின் திண்டுகளிலிருந்து கண்வாயில் கால்மடங்குதூரம் வரை மேற்குழாயையும் கீழ்க்குழாயையும் சட்டம்போல் துண்டு துண்டாய்ச் சேர்த்துக்கொண்டே போனார்கள். அம்மட்டும் திண்டுகளின் மேலேயே பொறுத்து நின்றது. அப்புறம் திண்டுகளின்மேல் மரக்கோபுரங்கள் கட்டினார்கள். ஆர்ச்சின் மத்தியைநோக்கி உறுப்புகளைச் சேர்க்கச் சேர்க்க ஒவ்வொரு உறுப்பையும் இழுத்துக் கயிறுகளாலும் வடங்களாலும் கோபுரத்திேனாடு கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். இருபுறங்களி லிருந்தும் ஆர்ச்சுவந்து மத்தியில் சேர்ந்தபின் மரக்கோபுரங்கள் முதலியவற்றைக் கலைத்து விட்டார்கள் இதையே ஒபர்டோ (Opporto) பாலத்திலும் (படம் 17) பார்க்கலாம். நயாகராபாலம் கட்டும்போது நதியிலுள்ள நீண்டபாகத்தை அனேகம் கயிறுகளால் தாங்கிப்பிடித்து, அக்கயிறுகளை யெல்லாம் நேர்மட்டமான ஒரு காணில்பூட்டி அந்நாணை கோபுரத்தோடு கட்டியிருப்பதையும் 18-வது படத்தில் காண்க.

சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் நடைபாதையைத் தாங்கும் ஒரு சிறு ஆர்ச்சுப்பால மிருக்கிறது.

(தொடரும்)

The Origin of the Co-operative Movement.

கூட்டுறவு இயக்கம் தோன்றிய முறைமை.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.

நண்பீர் அருமை நண்பீர் இருமையும்
நம்மவர் இன்புறச் செம்மையின் ஆய்ந்தால்
யாவரும் ஒன்றாய்க் கோளனும் கூட்டுறவு
இயக்கம் தன்னில் மயக்கம் நீங்கிச்
சேர்ந்துவாழ் குவதே தேர்ந்தநல் முறையாம்
என்று இனிது உரைக்கும் நன்றுசூழ் நண்பீர்
அருளே அன்பே பொருளே எனும் இவை
பிள்ளையே தாயே கள்ளம்இல் செவிலியே
என்றபேர் உறவில் பொன்றாது உலகை
வளர்த்தலுக்கு உழைக்கும் உளத்தினர்க்கு இயைந்த
கூட்டுறவு இயக்கம் நாட்டினில் எங்ஙனே
தோன்றியது ஆம்அதன் ஆன்றசீர் முறைமை
ஈதுஎனக் குறித்துஇங்கு ஓதுக எனக்கு என்று
உரிமையில் வினவும் அருமைசேர் மனத்துச்
சோதரர் கேளீர் ஆதர வாய்இதை
உலகினிர் தம்முள் சிலவளி மையினர்
[1]நிலனே [2]வேலையே மலையாம் [3]முதலே

1. Land. 2. Labour, 3. Capital.

என்றவூன் றனையும் நன்றுஉலகு உண்பான்
தந்தும் செய்தும் மூர்துறக் கொடுத்தும்
[4]பலன்களை விளைவித்து இலங்கிடச் செய்தோர்க்கு
ஆதலின் எமக்குப் போதிய [5]பகுதியும்
சீரிய [6]கூலியும் நேரிய [7]வட்டியும்
கிடைப்பதே உரிமையும் கடமையும் ஆகும்
என்று அறம் உரைப்பார் போன்றுஇவண் ஒன்றாய்த்
தனித்தனி கூடினர் தத்தம் நலத்தைப்
பெருக்கிக் கொண்டனர் செருக்கும் கொண்டார்
எனினும் தமக்குஇத் தனையும் ஆம்ஆறு
உவந்தனர் அளிக்கும் தவப்பெரி யவர்ஆம்
ஒருகுழு வினரை மறந்தனர் அறவே
அவரே [8]வாங்குநர் அவரே நாமும்
யாங்ஙனம் எனிலோ வாங்குதல் செய்யாது
எவரும் இனிதாய் மேவுஉயிர் வாழ்தல்
அவனியில் அமைகுவது அன்றாம் ஆதலின்
இங்ஙனம் ஆகத் தங்கம் தன்னை
முன்னே கொடுத்துப் பின்னே எதும்
பயன்பெறாது ஒழியும் அயர்வுஉறும் அந்தக்
குழுவினர் விழித்தனர் எழுந்தனர் கூடினர்
தத்தம் கருத்தை யுத்தினம் கூறினர்
செப்பிய மூவர்க்கு இப்புவி தன்னில்
இருக்கும் உரிமைஈண்டு இருக்கும் நமக்கும்
உளதே ஆகும் எளிதுஅன்று இலைஎனல்
ஆதலின் யாமும் ஓதிய மூவர்க்கு
எவ்வளவு உரிமையோ அவ்வள வும்முனே
கொடுத்தபின் மிகுந்த கோடிக் கணக்காம்
பொருளைப் பெறுதற்கு உரிமையைப் பெற்றுளோம்

4. Products. 5. Rent 6. Wages. 7. Interest. 8. Consumers.

அன்றியும் நம்மவர்க்கு ஒன்றிய வறுமையும்
பிணியும் பழியும் தணியும் தொலையும்
அழியும் அதனுல் ஒழியும் அடிமை
கடனும் இலாபமும் கடுங்கொடு வட்டியும்
பறந்துபோம் என்று ஆய்ந்து அறிந்தனர் ஒன்ருய்ச்
சேர்ந்தனர் இதுவே தேர்ந்துயான் கூறும்
கூட்டுறவு இயக்கை நாட்டிய
வரலாறு ஆகும் வரும் உயர் நலமே.

நலன்.

மதிப்புரை.

Review.

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்—குறள்

கலிங்கத்துப் பரணி (கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை-விலை ரூ. 1-12-0) 'பரணிக்கோர் சயங் கொண்டான்' என்று பரணிப்பாடலுக்கும் தனக்கும் தான்பாடிய சயங்கொண்ட சோழனுக்கும் அழியாப்புகழ் கொடுத்தது கலிங்கத்துப்பரணி என்னும் நூல். அதை இதற்கு முன்சிலர் அச்சிட்டிருப்பினும், இப்பொழுது கிடைப்பனவான பல ஏட்டுப் பிரதிகளை யெல்லாம் ஒருங்கே பரிசீலனைசெய்து மூலத்தை பிழையறப்பதிப்பிப்பதோடு மூலத்தின்பொருள் விளங்குமாறு அரும்பொருள் விளக்க முதலிய வற்றையும் நமக்கு ஸ்ரீமான் அ. கோபாலையர் அவர்கள் எழுதி யளித்திருக்கிறார்கள். கலிங்கத்துப்பரணி இரு காரணங்கள் கொண்டு போற்றத் தகுந்த காவியம்-சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்பது ஒன்று, காவிய நடையில் சிறப்புற்றது என்பது மற்றொன்று. ஆகவே இதன் பொருட்களை விளக்க முன்வருவோர் காவியங்களில் தேர்ந்தவராய்மட்டும் இருத்தல்போதாது; சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான வேறு நூல்களிலும் தேர்ந்தவராய் சரித்திர ஆராய்ச்சி செய்வோரின் பக்க பலத்தைஉடையவராய் இருத்தல் வேண்டும்; இவ்விரண்டு குணங்களும் இதன் பதிப்பாசிரியரிடம் பொருந்தி யிருப்பது அரும்பொருள் விளக்கத்தினின்றும் நன்குபுலப்படுகின்றது. மேலும் தமிழில் அதிகத் தேர்ச்சி பெறாதவருக்கும் கூட கவியின் பொருளையும் நடையின் அழகையும் நன்கு விளங்குவதையே நோக்கமாகக்கொண்டு எழுதப்பட்ட உரைகள் அபூர்வம். இவ்வாசிரியர் தேர்ந்தபண்டிதராயிருந்தும் எளிதில்விளங்கும்

சுலபமான நடையில் மூலத்தைப் படிப்பவருக்கு உண்டாகும் சந்தேகங்களை எதிர்பார்த்து உரை எழுதியிருப்பது சாலவும் போற்றத் தக்கது. பிரதி பேதங்கள் குறிக்குமிடத்து எப் பிரதிகளில் அப்பேதங்கள் காணப்படுகின்றன என்பதைக் குறித்திருந்தால் மிக்க நலமாக விருந்திருக்கும்; அவ்விதம் அடுத்த பதிப்பில் குறிப்பார் என்று நம்புகின்றோம்.

தாவர முதனூல் (First Book of Botany) (சென்னை வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் 1922) (விலை 12 அணா) சென்னை கிறிஸ்தவகலாசாலை தாவரசாஸ்திர போதகாசிரியர் M. S. சபேசய்யர் எம். ஏ. அவர்கள் இயற்றியது. ஆங்காங்கு விஷயங்களை நன்கு விளக்கும் சித்திரப்படங்கள் அமைக்கப் பெற்ற இவ்வரிய புஸ்தகம் தாவரதத்துவத்தை எளிதில் புலப்படுத்துவதான தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது. உண்மை சிதைவு படாமல் உள்ளபடி விளக்குவதற்கு வேண்டிய சொற்களை நிருமித்துக்கொண்டு தாவரநூலை அமைப்பதில் இவ்வாசிரியர் எடுத்த பெருமுயற்சி தமிழர் யாவராலும் போற்றத்தகுந்தது. இந்த புஸ்தகத்தின் மூலமாய் தாவர நூலை தமிழ் மக்கள் கற்றுணர்ந்து தேர்ச்சியடைவதே இவருக்கு நாம் ஆற்றும் கைம்மாறு ஆகும்.

இங்கிலாந்திற் கூட்டுறவு இயக்கம். கும்பகோணம்டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஊ. சா. வேங்கடராம ஐயர் கூட்டுறவை தமிழருக்கு புகட்டவேண்டி பலவிதமாக முயற்சி செய்து வருகிறார். இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் உண்டானதைப்பற்றியும் அதன் முதிர்ச்சியைப்பற்றியும்' ராபர்ட்டு ஓவன் ஆஷ்லேபிரபு, என்றபெரியோர்களைப் பற்றியும் தற்கால கூட்டுறவுச்சங்கங்களைப் பற்றியும் அவற்றை ஸ்தாபிக்கும் முறையைப் பற்றியும் விஸ்தரித்து எழுதியிருக்கிறார். அனுபந்தத்தில், கூட்டுறவு இயக்கத்தை சிலாகித்துக் கூறும் பாடல்கள் சில சேர்க்கப் பட்டிருக்கின்றன.

வே. நா.

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி.
Swami Dayanand Saraswati

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(தொடர்ச்சி)

எல்லா வருணத்தாரும், இருபாலாரும் கல்வி கற்கவேண்டும். ஒவ்வொருவரும் காயத்ரி மந்திரத்தைப் பொருளுடன் அறிந்து, அநுதினமும் அதைப் பாராயணஞ்செய்யவேண்டும்.

ஆணும் பெண்ணும் தம் கற்புநிலை தவறி நடக்கக் கூடாது. ஆண்பாலர் 25-ம் வயதுமுதல் 48-ம் வயது வரையிலும், பெண்பாலா 16-ம் பிராயமுதல் 26-ம் பிராயம் வரையிலும், அவரவர்க்குப் பிடித்த, அல்லது பொருத்தமான பெண்களையும் ஆண்களையும் மணந்து இனிது இல்லறம் நடத்திவரவேண்டும். கலியாண விஷயத்தில் பெற்றோர்கள் தலையிடக்கூடாது. பெற்றோர்கள் பிறக்கும் குழந்தைகளுக்குத் தக்க காலத்தில் கல்வி யாரம்பம்செய்வித்து, அறவிஷயங்களைப் புகட்டி நன்னடத்தையராகச் செய்வதற்கான சக்தி உடையராயிருக்கவேண்டும். நீராப்பிணியர்களும், தரித்திரர்களும், உன்மத்தரும், *கல்வியறிவு இல்லாதவரும் விவாகித்துக்கொள்ளக்கூடாது.

களவுசெயற்களும் கள்ளப் புணர்ச்சியும் இழிவான வையாதலின், பாசத்தை யடக்குதற்கியலாத கைம்பெண்கள் வெளிப்படையாய் மணந்துகொள்ளலாமாம்.

*பிரபஞ்சத்தின் உயிர் நிலை பேருனுஷ்டாத்திற்றுனிருக்கின்றது. பேதானுஷ்டான மிலதேல் பிரபஞ்சம் நிலைகலங்

---

*'சச்சி தானந்தசிவம்' என்ற நூலினின்று எடுத்துச் சுருக்கப்பட்டுளது.

கும் ; கலக்கத்திற்கும் குழப்பத்திற்கும் காரணமாகும். இப் புண்ணிய பூமியாகிய பாரதவருஷத்தில் தற்காலத்தில் ஜாதி விஷயத்தைப்பற்றி இரண்டு கக்ஷிகள் இருக்கின்றன. ஒன்று ஜாதியின் ஆசாரங்கள் அவசியம் கவனிக்கப்படவேண்டு மென்றும், எல்லா ஜாதியாரும் பிராம்மணர் எனப்படுவோ ருக்கு முறையே படிப்படியாய்த் தாழ்ந்தவர்களென்றும் பிடி வாதஞ் செய்யும் கொள்கைகளை யுடையது. மற்றொன்று, ஜாதியாவது - ஆசாரமாவது! இந்த ஜாதியாசாரமே நமது நாட்டை இந்நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டது. ஆகை யால், ஜாதி என்றவார்த்தையைக் கூட நினையாமல் எல்லோ ரும் ஏகபோகமாய் ஒரே பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டு, சுகமாய் வாழ்தலே நமது தேசத்தின் உயர்வுக்கானவழி என்ற கொள்கைகளை யுடையது. இங்ஙனம் இரண்டுகக்ஷிகள் ஏற்பட்டு நமது தேசமானது நிலை குலைந்து தத்தளித்துத் தடுமாறுகின்றது. இவ்விரண்டு கக்ஷிகளும் நமது ராஜ்ஜி யத்தை முன்னுக்குக் கொண்டுவரா. இருகக்ஷிக்காரரும் பக்ஷ வாதிகள். காக்கையைப்போல, இரண்டு கண்களிருந்தும் ஒற் றைப் பார்வையையே உடையவர்கள் ஜாதிபேதம் வேண்டு மென்று சொல்பவர்கள் தேசத்தை அசையவொட்டாமல் மூச்சைப் பிடித்துக்கொல்லப் பார்க்கிறார்கள். ஜாதிபேதம் வேண்டாமென்று சொல்பவர்கள் தேசத்தை ஒரே ஆட்ட மாய் ஆட்டி வேருடன் பிடுங்கி எறிந்துவிடப் பார்க்கிறார்கள். இவ்விருவர்களாலும் தேசம் நாசமேயாம்.

(தொடரும்.)

தமிழ் மொழிகள்
Tamil Terms

மனுஷ வங்காதி பாதம்
Human Anatomy

ஸ்ரீ. தனெல் வி. சப்மன் என்னும் வைத்தியரால் மொழி பெயர்க்கப்பட்டு அமெரிக்கா லங்கை மிஷனைச்சேர்ந்த ஸ்ரீசமுவல் பி. கிறீன் என்னும் வைத்தியரால் திருத்தப்பட்டு 1872ம் வருஷத்தில் வெளியிடப்பட்ட மனுஷவங்காதிபாதம் என்னும் அரிய நூலின் கடைசியில் காணப்படும் அட்டவணையினின்றும் இம்மொழிகள் எடுக்கப்பட்டனவாகும்.

(96-ம் பக்கம் தொடர்ச்சி)

Mastoid cells - குசுகவிலங்கள்,
Maximum - சரிட்டம்
Meatus - துவாரம், கால்வாய்
,, auditorius - கேள்வி
,, of nose - நாசிக்கால்வாய்
,, urinarius - சலவாசல
Median line - நடுவரி, மத்திய ரேகை
,, plane - மத்திய தளம்
Mediastinum - மத்திஸ்தானம்
,, testis - பீசமத்தி
Medulla oblongata - முகுளம
,, spinalis - கசேருக்கொடி கசேருலதை
Membrane - சவ்வு, சில்லி, மெம்பிரேன்.
,, arachnoid - சாலவம்
,, basement - தாரகச்சவ்வு
,, choroid - தாரகம், கோறடு
Membrane costo-coracoid - பழுக்கணை
,, crico-thyroid - ஊர்மிகை வீதனை
,, granulosa - கிறனுல
,, hyaloid - படிக
,, Jacob's - யாக்கோபர்
,, limiting - எல்லைச்சவ்வு
,, mucous - சளிச் சவ்வு
,, Schnederian - சினைதர்
,, serous - வசா
,, of spinal cord - கசேரு
,, synovial - சித்தை
,, thyro-hyoid - வீதனைதனு
,, tympani - ஆனக, பறை
Membraneous labyrinth - சவ்வுப் பிரமணம்
,, portion of urethra - அந்தரப் பகுதி

Membraneous semicircular canals-சவ்வுத் திரிதடம்
Meninges - சவ்வு, வரணம்
,, cerebral - மூளை
,, spinal - கசேரு
Mesentery - மதியாந்திரம்
Meso, prefix-மதி
Meso-caecum - மதியந்தகை
Meso-colon - மதி புரீதம்
Mesorchium - மதி பீசம்
Meso-rectum - மதி விசேகி
Meta carpus - கரபம்
Meta tarsus - புரகுற்பகம்
Microscope - சூக்குமாட்சி, மிக்கிறஸ்கோப்பு, பூதக் கண்ணாடி
Minimum - லேசகம்
Modiolus of cochlea- நாபிசம்
Mons veneris - அகல்
Monticulous cerebelli - கோர்த்தகிரி
Morsus diaboli - பேய்க்கவ்வு
Mouth - வாய், லபணம்
Mucus - சளி, சிங்காணம், சேட்மம், மூக்கு
Muscle - பேசி
,, abductor - பேதனி
,, indicis - தர்ச்சனி
,, minimi digiti - கனிட்ட
,, pollicis - அங்குட்ட
,, accelerator urinae - அமுரியோட்டி
,, accessorius pedis - உபமடகி
,, accessorius ad sacra lumbalem - உபபீடிகைப் பர்சுவி
,, of acrominal region - தோள்
,, adductor - யோகி
,, brevis - குறும்
,, longus - நெடும்
,, magnus - பெரும்
,, pollicis - அங்குட்ட

Muscle anconeus- கூபரி
,, anomalus - அநாம
,, antitragicus- எதிர்ச்சாகி
,, aryteno-epiglottideus- சேமிமாடகி
,, arytaenideus - மாடகி
,, auriculae - சோத்திரி
,, azygos uvulae-காவணி
,, biceps - இருமூலி
,, biventer cervicis - பிடரிருபீனி
,, brachial region - சயம்
,, brachialis anticus- முற்புசி
,, buccinator - தமனி
,, caninus - சிருக்கமேற்றி
,, cervicalis ascendens கண்டமேறி
,, ciliary of eye - சக்கரவ
,, circumflexus palati - தாலுவிறக்கி
,, coccygeus - புச்சி
,, cochlearis - கம்பு
,, complexus - சங்கிரணி
,, compressor naris - நாசிப்பிரசாரி
,, compressor narium minor- நாசிச்சிறுபிரசாரி
,, compressor urithrae - மிகனியமூகி
,, constrictor pharyngis -சம்வாரி
,, coraco-brachialis -கணைப்புசி
,, corrugator supercilii- புருரி
,, cremaster - பீசமேற்றி
,, crico-arytaenoideus - ஊர்மிகைமாடகி
,, crico-thyroid- ஊர்மிகை வீதனி
,, cruraeus - வாமி
,, deltoid - கிசகி

Muscle depressor- இறக்கி, பாதனி
,, depressor alae nasi- சரியிறக்கி
,, depressor anguli oris- கிருக்கமிறக்கி
,, depressor labii inferioris - அதரமிறக்கி
,, diaphragm - விதானம்
,, digastric - இருபேனி
,, dilator nares - நாசிப்பட்சகி
,, dorsum of foot - பதமேல்
,, erector-கிமிர்த்தி, உத்தாபனி
,, erector clitoridis - சுமரிகிமிர்த்தி
,, erector penis - சிசினகிமிர்த்தி
,, erector spinal - சசேருகிமிர்த்தி
,, of ear - செவி
,, of epiglottis - சேமி
,, extensor - நீட்டி, திரங்கி
,, ,, brevis digitorum- விரற்குறுநீட்டி
,, extensor carpi radialis brevior - ஆரைசகுளசக்குறு நீட்டி
,, extensor carpi radialis longior - ஆரைக்குளசநெடு நீட்டி
,, extensor carpi ulnaris -இரத்தினிக்குளச நீட்டி
,, extensor coccygis-புச்சநீட்டி
,, extensor communis digitorum - விரற்பொதுநீட்டி
,, extensor indicis - தர்ச்சனிநீட்டி
,, extensor longus digitorum - விரல்நெடுநீட்டி

Muscle extensor minimi digiti - கனிட்டநீட்டி
,, extensor ossi metacarpi pollicis - அங்குட்டகாப நீட்டி
,, extensor primi internodii pollicis-அங்குட்டகடு நீட்டி
,, extensor proprius pollicis - அங்குட்ட நீட்டி
,, extensor secondi internodii pollicis - அங்குட்ட தனிநீட்டி
,, extensor of eyelids - நிமை
,, extensor of face - முக
,, femoral region - தொடை
,, fibular region - காலின் புறப்பேசிகள்
,, flexor - மடக்கி, வணக்கி
,, ,, accessorius - உபமடக்கி
,, flexor brevis minimi digiti - கனிட்டகுறு மடக்கி
,, flexor brevis digitorum - விரற்குறுமடக்கி
,, flexor pollicis of hand - அங்குட்ட குறுமடக்கி
,, flexor carpi radialis - ஆரைக்குளச மடக்கி
,, flexor carpi ulnaris - இரத்தினிகுளசமடக்கி
,, flexor longus digitorum - விரல்நெடுமடக்கி
,, flexor longus digitorum, pollicis of hand- அங்குட்டநெடுமடக்கி
,, flexor ossis metacarpi pollicis - அங்குட்ட காப மடக்கி
,, flexor profundis digitorum - விரல்உள்மடக்கி

Muscle flexor sublimis digitorum- விரல்வெளிமடக்கி
,, of foot - பாத
,, of forearm-முன்கை, சய
,, form of - வடிவம்
,, fusiform - தர்க்குவ
,, gastrocnemius - பிற்சரணி
,, gemellus - உசளி
,, genio-hyo-glossus- சம்பதனு சிகுவி
,, genio-hyoid - சனுசம்பி
,, gluteus maximus- பருஞ்சகனி
,, ,, medius - நடுச்சகனி
,, ,, minimus - சிறுச்சகனி
,, of gluteal region - குண்டி
,, gracils - லதாவி
,, helicis major - பெருஞ்சுருளி
,, ,, minor - சிறுசுருளி
,, of hip - இடுப்பு
,, humeral region - புய
,, hyo-glossus-தனு சிகுவி
,, iliac region - இடுப்பின் முற்பேசிகள்
,, iliacus - பாழுகி
,, infra-costal- உட்பழுவி
,, infra-spinatus - கீழ்ப்புருவி
,, insertion of- பற்றுவாய், நிவேசம்
,, inter-costal - பழுநடுவி
internal sphincter-உட்சங்குசி
,, inter ossei of foot- புறகுற்பிகள்
,, dorsal of foot - மேற்புரகுற்பி
,, dorsal of hand - பின்கரபிகள்
,, ,, hand கரபிகள்

Muscle dorsal of palmar - முன்கரபி
,, ,, plantar - கீழ்ப்புரகுற்பி
,, inter-spinales - முண்ணடுவி
,, inter-transversales- குறுககுநடுவி
,, intrinsic- உரிய சுய
,, involuntary - அனிச்சா
,, of jaw - தாடை
,, labial - உதட்டு
,, of larynx - கிருக
,, latissimus dorsi- வென்பிரசாரி
,, laxator-இளக்கி, தளர்த்தி
,, tympani major - பேராணகமிளக்கி
,, ,, minor - சிற்றாணகமிளக்கி
,, levator-ஏற்றி,ஆரோபணி
,, ,, anguli oris- சிருக்கமேற்றி
,, ,, scapular - வாகேற்றி
,, ,, ani - பாயுவேற்றி
,, ,, glandular thyroidae - வீதனகோளமேற்றி
,, ,, labii inferioris - அதரமேற்றி
,, ,, labii superioris- ஒட்டமேற்றி
,, ,, ,, alaeque nasi- நாசியோட்டமேற்றி
,, ,, menti-அதரமேற்றி
,, ,, palati-தாலுவேற்றி
,, ,, palpebrae - நிமையேற்றி
,, ,, prostate - புரஸ்தியேற்றி
,, levatores costarum - பழுவேற்றி
,, lingualis - சிகுவி

Muscle of lips - உதட்டு
,, of little finger- கனிட்ட
,, longisimus-லென்நீனி
,, longus colli- கண்டநீனி
,, of lower extremity- அதக்காய
,, lumbricales-குருவிகள்
,, lymphatics of - சோஷணிகள்
,, masseter- சருவணி
,, multifidus spinae - சமூகி
,, mylo-hyoid-தனுகுஞ்சி
,, myrtiformis - ஹானசி
,, nerves of - நரம்புகள்
,, obliquus abdominis - சாயுதரி
,, obliquus auris - சோத்திர சாயி
,, obliquus capitis inferior - கீழ்ச்சாயி
,, obliquus capitis superior - மேற்சாயி
,, obliquus oculi inferior- சாய் நயனி
,, obliquus oculi superior- கபி நயனி
,, obturator externus - வெளிக்குரந்தி
,, obturator internus - உட்குரந்தி
,, occipito-frontalis- பிடர்நுதலி
,, omo-hyoid - தனுவாகி
,, opponens minimidigiti - கனிட்ட கரபமடக்கி
,, opponens pollicis - அங்குட்ட கரபமடக்கி
,, orbicularis oris - வபனி
,, origin of a - எழுவாய், உற்கமம்
,, palpebraerum - நிமிலனி
,, palate - தாலு [illegible]

Muscle palato-glossus-தாலு சிருவி
,, palato-pharyngeus - தாலு கிகரணி
,, palmaris brevis - அங்கைக்குறளி
,, palmaris longus - அங்கைநீளி
,, pectineus - மேகனி
,, pectoralis major - பெருவட்சி
,, pectoralis minor - சிறுவட்சி
,, of penis - சிசினம்
,, penniform - சதன
,, of perinaem - விடப
,, peroneus brevis- குறுஞ்சரி
,, peroneus longus - நெடிஞ்சரி
,, peroneus tertius- முன்சரி
,, of pericranium - பரிகபாலம்
,, of pharynx - தொண்டை
,, of the pinna - காதுமடல
,, plantaris - நவணி
,, platysma myoides - கண்டவிஸ்தாரி
,, popliteus - மந்திரி
,, pronator - புரட்டி, நிவர்த்தனி
,, pronator quadratus - சதுரபுரட்டி
,, pronator radii teres - சாய்புரட்டி
,, psoas magnus - பேர்கடிசி
,, psoas parvus - சிறுகடிசி
,, pterygoid internal - அகப்பாதவி

Muscle pterygoid external - புறப்பாதவி
,, pyramidalis abdominis - உதரசிகரி
,, pyramidalis nasi - நாசிச்சிகரி
,, pyriformis - அஞ்சீரவி
,, quadratus femoris - சதுரவாமி
,, quadratus lumborum - கடிசதுரி
,, quadratus menti - அதரமிறக்கி
,, quadriceps extensor cruris - தொடைச் சதுமூலி
,, radial region - ஆரை
,, radiated - விசம
,, rectus abdominis - உதரநீனி
,, rectus capitis anticus major - முன் பெருஞ்சரனி
,, rectus capitis minor - முன் சிறு சரனி
,, rectus posticus major - பின் பெருஞ்சரனி
,, rectus posticus minor பின் சிறு சரனி
,, rectus femoris - தொடைச்சரனி
,, rectus lateralis - பக்கச்சரனி
,, rectus oculi - நயனி
,, ,, oculi externus - புறநயனி
,, rectus oculi superior - மேல்நயனி
,, rectus oculi inferior - கீழ்நயனி
,, rectus oculi internus - அகநயனி
,, rhomboideus major - பெருஞ்சாசிவி

Muscle rhomboideus minor - சிறுசாசிவி
,, risorius - முறுவலி
,, rotatores spinae - கசேரு திருகிகள்
,, sacro lumbalis - பீடிகைப் பர்சுவி
,, sacro-coccygens anticus - புச்சமடக்கி
,, sartorius - சப்பணி
,, scalenus - பழுக்கந்தரி
,, scapular region - வாகு
,, semimembranosus - சில்லிகார்த்தி
,, semi penniform - சதஞார்த்த
,, semi spinalis colli - கழுத்துப் பாதிககசேரி
,, ,, dorsi - வென்பாதிக்கசேரி
,, semi tendinosus - சநார்த்தி
,, serratus magnus - பெருந்தந்துரி
,, ,, posticus inferior - வென்கீழ்த்தந்துரி
,, ,, posticus superior வென்மேற்தந்துரி
,, sheath of - போர்வை
,, sole of foot - தல
,, soleus - சபரி
,, sphincter - சுருக்கி, சங்குசி
,, ,, ani external - பாயு வெளிச்சுருக்கி
,, ,, internal - பாயுவுட்சுருக்கி
,, ,, vaginae - யோனிச்சுருக்கி
,, spinalis cervicis - கழுத்து முள்ளி
,, spinalis dorsi - வென் முள்ளி

Muscle splenius - உபதானி
,, ,, capitis - தலையுபதானி
,, ,, colli - கழுத்துபதானி
,, stapedius - வேதிகி
,, sterno-cleido mastoid -வட்சகுசகி
,, sterno-hyoid - தனுவட்சி
,, sterno-thyroid - வீதனவட்சி
,, stylo-glossus - சிகுவலேகி
,, stylo-hyoid - தனுலேகி
,, stylo-pharyngeus - கிரணலேகி
,, subanconeus- உபகூபரி
,, subclavius - செததுரி
,, subcrureus - உபவாமி
,, subscapularis - வாகுமேலி
,, supinators - கிமிர்த்தி, உத்தானி
,, ,, brevis - குறுகிமிர்த்தி
,, ,, longus - நெடுகிமிர்த்தி
,, ,, supraspinales - முண்ணனீனி
,, supraspinatus - மேற்புருவி
,, temporal - கேசாரி
,, tensor palati - தாலுவிறக்கி
,, tensor tarsi - இமைமிறக்கி
,, tensor tympani- ஆனகமிறக்கி
,, tensor vaginae femoris- தொடையுறைமிறக்கி
,, teres major- பெருவடவி
,, ,, minor - சிறுவடவி
,, of thigh - தொடை

Muscle thoracic region- பிஞ்சரம்
,, of thumb - அங்குட்ட
,, thyro-arytenoideus- வீதனமாடகி
,, thyro-epiglottideus - சேமிவீதனி
,, thyro-hyoid- தனுவீதனி
,, tibialis anticus - முன்நளகி
,, tibialis posticus - பின்நளகி
,, trachelo-mastoid - கிரீவகுசகி
,, tragicus - சாகி
,, transversalis abdominalis- குறுக்குதரி
,, transversalis cervicis- குறுக்குக்கந்தரி
,, transversalis auriculae -குறுக்குச்சோத்திரி
,, transversalis pedis - குறுக்குத்தலி
,, transversalis perinaei -குறுக்குவிடபி
,, trapexius - கும்பி
,, triangularis sterni - உள்வட்சி
,, triceps extensor cubiti - மும்மூலி
,, trochlearis - கபிலயனி
,, of trunk - முண்டம்
,, of tympanum - ஆனகம்
,, of upper extremity - உற்காயம்
,, vastus - விசாலி
,, vastus externus - புறவிசாலி
,, vastus internus - அகவிசாலி
,, vertebral region - கசேரு
,, ,, anterior - கசேருமுன்

Muscle vertebral lateral - கசேருபக்க
,, voluntary - இச்சா
,, zygomaticus major - பெருயுசிருக்கி
,, ,, minor - சிறு யுக சிருக்கி
Musculin - பேசிசம், மஸ்குலின்
Musculi papillares - சூசுகயுபம்
,, pectinati - சகைவிகள்
Mylo-(prefix) - குஞ்ச, குஞ்சக
Mylo-hyoid - தனுகுஞ்சி

Nails - நகம், உகிர்
Nares - நாசியறை, கைசியம்
Nasal angle - நாசிக்கோணம்
Nates - குண்டி, சகனம்
,, of brain - முன் கநதாசம்
Neck - கழுத்து, கழுந்து, கிரீவம், கண்டம், கந்தரம்
Nerve - நரம்பு, சிரை, எசம்
,, abducens - சடாட்ச
,, accessory obturator - உபகுந்தக
,, accessory spinal - உபரோதா
,, acromial - கிசக
,, afferent - அனுவாச
,, anatomy of - வியூகனம்
,, articular - சந்தி
,, auditory - கேள்வி
,, auricular - செவி
,, ,, posterior - செவிப் பின்
,, ,, magnus - செவிப் பெரு
,, auriculo - temporal - கோநாரசெவி
,, axillary - அகுகிள்
,, buccal - கதுப்பு
,, cardiac - இரிக
,, carotid - கிரீவ
,, cavernous of penis - சிசினத்தின் குகா
Nerve cavernous large - பெருங்குகா
,, ,, small - சிறுகுகா
,, centrifugal - அபிவாக
,, centripetal - அனுவாக
,, cerebro-spinal - கோர்த தகசேரு
,, cervical - கழுத்து
,, cervico-facial - கிரீவமுக
,, chorda-tympani - ஆனகரச்சு
,, ciliary - சக்கரவ
,, ,, long - நெடுஞ் சக்கரவ
,, ,, short - குறுஞ் சக்கரவ
,, circumflex - சுற்று
,, clavicular - செத்துரு
,, coccygeal - புச்ச
,, cochlear - நவசும்பந்தி
,, communicans noni - சலவை
,, of Cotunnius - நாசியண்ணை, கொதன்னிநரம்பு
,, cranial - சபால
,, crural - தொடை
,, ,, anterior - தொடைமுன்
,, cutaneous - சரும
,, dental - தசன
,, ,, anterior - முற்றசன
,, ,, inferior - கீழ்த்தசன
,, ,, posterior - பிற்றசன
,, descendens noni - நவமிறங்கி
Nerve digastric from facial - இருபீனி
,, digital - விரல்
,, dorsal of penis - சிசினவெளி
,, of dura mater - பாலனி

நேரிட்ட இந்த விவாதத்தால், [1]கலியாணம் நின்று விடுமோ என்று பயப்படும்படியாய் விட்டது; ஆனால், முகூர்த்த தினத்துக்கு முந்திய நாள், இந்த விஷயத்தைப்பற்றி நாங்கள் யாதொரு தடையுமின்றித் தர்க்கஞ்செய்ய ஒப்புக்கொண்டோம்.

இருபக்கத்திலும் சரியான உற்சாகம் பொருந்தியிருந்தது. நான் [2]இல்லறதர்ம விரோதி யென்று அவர் வற்புறுத்திப் பேசினார். நானும் அப்படியே அவரைத் திருப்பிச் சொன்னேன். மறுபடியும் அவர் பேசினார். நானும் எதிர்த்துப் பேசினேன். இப்படி வாதம் பலப்பட்டுச் சூடேறியிருக்கையில், எனது உறவின் முறையார் ஒருவர் இடையில் நுழைந்து என்னை வெளியில் அழைத்தார் அதிக உரிமையோடு அவர், என்னை நோக்கி, "ஐயா, போதகரே, இதுவல்ல சமயம். எதற்கும் காலம் உண்டு. ஞாலம் வருவதானாலும், காலம் கருதிக் காரியம் செய்யவேண்டும். 'கூம்பும் பருவத்துக் கொக்கைப்போல இரு-ஓம்பும் பருவத்து அதன் குத்தைப்போல இரு'என்பது [3]பழமொழி, உமக்குத் தெரியாதா? ஏன் இப்படி வாதத்தைச் சமயமறியாமல் வளர்த்திக்கொள்ள வேண்டும்? உடனே அதைத் தளர்த்திவிட்டுக் காரியசித்தி பெறவேண்டும். எப்போதும் தளர்த்திவிடா விட்டாலும் உமது மைந்தன் மணம் முடியுமட்டுமாவது அப்படிச் செய்யக்கூடாதா? செய்தால் எல்லார்க்கும் நன்மையாம்" என்று உறுதி கூறினார். அது கேட்ட நான், "எப்படி, உண்மை வாதத்தை விட்டுவிடுவது [4]அவர் வேண்டுமானால் மாப்பிள்ளை ஆகட்டும்; ஆனால், அவர் வாதம், [5]வாதபித்தம் என்பது

---

1 வாலிப வதூவரர்களுடைய திருமணம்.

2 மனையற மாற்றான்.

3 கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து—திருவள்ளுவர்.

4 அவர்-வில்மட்.

5 வாதபித்த சிலேத்துமம் என்னும் வழக்கச் சொல். (Play-ing uponwords.)

போய்ப் [1]பித்தவாதமாய்ப் பீடழியும். இப்போது எனக்கு நீர் சொல்லி வந்த உறுதி மொழிகளுக்கு மெத்த வந்தனம். ஆனாலும், என் ஆஸ்தியை இழந்தாலும் இழப்பேனே யன்றி இந்தப் [2]பிடிவாதத்தை மட்டும் இழந்துவிட மனமொவ்வேன்" என்றேன். என்றதுதான் தாமதம்; உடனே என்னை அவர் ஏறெடுத்துப் பார்த்து, "உமது ஆஸ்தியா! அதைப்பற்றி உம்மிடத்திற் பேச எனக்கு மெத்த விசனமா யிருக்கிறது. அது ஒன்றுமே இல்லை—எல்லாம் போய்விட்டபடிதான். உமது பணம் வைத்திருந்த பட்டணத்து வர்த்தகன் அப்போதே போய் விட்டான். அவனுக்குக் கடன் மேலிட்டு விட்டது. அது கொடுக்க வகையில்லாததனால் வெளியில் தெரிந்தால் வெட்கக்கேடென்று வேறிடம் போய் விட்டான். ஒரு பவுனில் ஷில்லிங்குக்கும் வகையில்லாமற் போய்விட்டான் என்று எண்ணுகிறார்கள். 'இப்போது தெரிவித்தால் உமக்கும் உமது குடும்பத்திற்கும் மனவதிர்ச்சி உண்டாகும். கலியாணம் ஆனபிறகு தெரிவிக்கலாம்' என்று இது வரையிலும் எண்ணியிருந்தேன். அப்படி எண்ணி யிருந்த நான் இப்போது ஏன் தெரிவித்தேன் தெரியுமா?—இது தெரிந்து கொண்ட பிறகாவது உமது கொள்கையின் பிடிவாதம் குறையாதா என்பது எனது நோக்கம் - நீரும் சரியானபடி உமது புத்தியைக் கொண்டு யோசித்து, உமது மகன் [3]அந்த மங்கையின் [4]ஆஸ்திக்குரியவனாகு மட்டுமாவது, உமது வாதத்தை உண்மையா யில்லா விட்டாலும், மேலுக்காவது நிறுத்தி வைப்பது மெத்த முக்கியம் என்று நீரே தெரிந்து கொள்வீர் என்பது எனது எண்ணம்" என்று முடித்தார். 'சரி' என்று நான் ஆரம்பித்தேன்; "நீர் சொல்வது நிஜமானால், நான் பிச்சைக்காரனாவேன். ஆனால், அதனால் நான், வீண்

---

1 பித்தவாதம்-பைத்தியக்கார வாதம்-பொருந்தாவாதம்.

2 பிடிவாதம் - பிடித்தவாதம், செய்தவாதம், ஒரே பிடிவாதம் எனலுமாம்.

3 அந்த மங்கை - வில்மட்டின் மகள்.

4 கலியாணத்துக்குப் பிறகு அவள் கொண்டுவரும் சீதனம் முதலிய ஆஸ்தி.

புரளிக்காரன் ஆய்விடமாட்டேன்— முன்பின் முரண்பட மொழிந்து என் கொள்கையை விட்டு விடமாட்டேன். இப்போதே நான் உடனே போய், என் நிலைமையை [1]வர்த்தகச் சங்கத்தார்க்குத் தெரிவிப்பேன். விவகார ஒழுங்குக்காக, உண்மையாய்ப் பேசுமிடத்து, இதற்கு முந்திக் கொஞ்சநஞ்சம் [2] கிழவர் விஷயத்தில் நான் கொண்டிருந்த [3] தப்பொப்புகளையும் தகாதென்று மறுக்கிறேன் - அன்றியும் என்றென்றும் அவர் எந்த விதத்திலும் மாப்பிள்ளையாவதை ஒப்பவே மாட்டேன்" என்று பிடிவாதமாய்ப் பேசி முடித்தேன்.

எங்கள் செல்வச் சேதச் செய்தியை நான் தெரிவித்த போது, இருகுடும்பத்தார்க்கும் ஏற்பட்ட [4] இன்னல் உணர்ச்சியை எடுத்தெழுதுவதென்றால் ஏடிடங்கொள்ளாது. மற்றவர்கள் அடைந்த துயரம் கொஞ்சம்; ஆனால் வாலிபக்காதலர் அடைந்த துன்பத்துக்கு அளவேயில்லை. அதற்கு முந்தியே அந்த வதூவர சம்பந்தத்தை நீக்கிவிட வேண்டுமென்று எண்ணியிருந்த வில்மட் 'சட்டி சுட்டது, கை விட்டது' என்றபடி, இந்த [5] இடும்பை காரணமாக, அந்த வதூவர சம்பந்தத்தை ஒழித்துவிட வேண்டுமென்று நிச்சயஞ் செய்து கொண்டார். அவரிடத்தில் ஒன்றுமட்டும் [6] ஆசாரம் பூர்த்தியாய் இருந்தது; அதாவது உலகானுபவமுள்ள முன்யோசனை-இதுதான் எல்லார்க்கும் எழுபத்திரண்டில் இருக்கும் பொதுவான உத்தம குணம்.

---

1 பணம் போட்டிருந்த வர்த்தகக் கூட்டத்தார்.

2 கிழவர்-வில்மட்.

3 தப்பொப்புகள்- தப்பு+ஒப்புகள் - தப்பானலும் தாக்ஷிணியத்திற்காக ஒப்புகொண்டவைகள்.

4 இன்னல்- துன்பம், துயரம்.

5 இடும்பை- துக்கம்.

6 ஆசாரம்-ஒழுக்கம்-உத்தம குணம்.

மூன்றும் அதிகாரம்

பரதேசம் போதல். நம்முடைய வாழ்நாட்களின் அதிர்ஷ்டா நுகூலம், கடைசியாகப் பார்க்குமிடத்து, நம்முடைய சுய முயற்சியின் பலனுகவே முடிகிறது.

எங்கள் செல்வச் சேதத்தின் செய்தி பொய்யாய்ப் போகாதா என்பதே எங்கள் குடும்பத்தின் ஓரே எண்ணம்; ஆனுல் *பட்டணத்திலிருந்த என்னுடைய காரியஸ்தனி (குமாஸ்தா) டத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிற் கண்டிருந்த விவரத்தால் அந்தச் செய்தி உறுதியாயிற்று. என்னளவில், அதை நான் ஒரு பெரிதாக மதிக்கவில்லை. என் குடும்பத்தைக் குறித்துத்தான் எனக்குக் கவலை அதிகமாயிருந்தது. ஏனெனில், அவர்கள் கல்வி யறிவற்றவர்களாய், இகழ்ச்சி யுணர்வின்றி, உலக மதிப்பில் தாழ்ந்து போவார்கள்.

பதினைந்து நாட்கள் வரையில் நான் அவர்களுடைய விசனத்தை ஆற்ற முயலவில்லை. ஏனென்முல், அவசர பரிகாரம் விசனத்தை நினைப்பூட்டி வளர்த்துமன்றித் தளர்த்தாது. இந்தச் சமயத்தில் என் எண்ணங்களெல்லாம் இனி அவர்களை நான் காக்கும் வழி தேடுவதில் ஊன்றியிருந்தன. கடைசியாக எனக்கு வருஷத்தில் பதினைந்து பவுன் வரும்படியுள்ள ஒரு †புரோகித வேலை கிடைத்தது. அது என்னுடைய கொள்கைகளுக்கு இடையூறின்றி நான் அனுபவிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஆகையால் அதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு, ஒரு சிறு குத்தகை நிலத்தைப் பயிரிட்டு அதனுல் என் வரும்படியை பெருக்கிக்கொள்ளத் தீர்மானித்தேன்.

இப்படித் தீர்மானித்ததனுல், சிதறியிருந்த என் செல்வங்களை ஒன்று சேர்ப்பதில் எனக்கு உடனே கவலை உண்டாயிற்று. வாங்கின கடன்களைக் கொடுத்துவிட்டுக் கொ

---

* லண்டன் நகரம்.

† புரோகிதம் = குருத்தொழில்

டுத்த கடன்களை வாங்கிக்கொண்டோம். பதினாலாயிரம் பவுன் எங்களிடத்தி லிருந்ததில் நானூறுதான் மீந்தது.

இதுவரையில் இருந்ததுபோல், அல்லாமல் காலத்திற் கேற்ற கோலமாய், என் குடும்பத்தாரின் சுய மதிப்பைச் சமயத்திற்குத் தக்கவாறு மாற்றுவதில் என் கவனஞ் சென்றது. 'பிச்சைபுக்குண்பான் பிளிறுமை முன்னினிதே' என்றபடி, இல்லாமல் வறியோர்கள் தமக்கிட்டதின்மேல் ஏருசைப் படுதல் ஆபத்துக இடமாய் முடிகின்றது. ஆதலால் நான் பின்வருமாறு சொல்லத் தொடங்கினேன்; 'ஓ! எனது குழந்தைகளே! நீங்கள் நன்றாய் ஆராய்ந்து உணரவேண்டும். 'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமி னென்றாற் போகா' என்றபடி சற்று முன்னதாக நமக்கு நேரிட்ட துரதிருஷ்டத்தை எப்படிப்பட்ட விவேகத்தாலும் விலக்கி யிருக்க இயலாது. ஆனால் இனிப் புத்தியை உபயோகித்தால் அந்த நஷ்டத்தினால் எய்தும் இடும்பைகளைத் தடுத்துக்கொள்ளலாம். என்னருமை மக்காள்! தற்காலம் நாம் ஏழைகளானோம் ஆனால் என்ன! நமது அறிவுமா ஏழையாய்விட்டது! இல்லை, இல்லை. அது என்ன சொல்கிறது தெரியுமா? 'நிலையிற்பிரியேல்' என்றபடி நமது நிலைமைக்குத் தக்க புலமை யுடையவர்களாக வேண்டுமென்கிறது; 'மாவுக்குத்தகுந்த பணியாரம்' என்றபடி நிலைமைக்குத் தகுந்த அநுபவத்திற்றிரும்பவேண்டும் என்கிறது அபபடி நாம் நிலைமைக்குத்தக்க சுகாநுபவத்தை விரும்பினால்தான், விதியை மதியால் வெல்லலாம். 'குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பனிநீர்' என்றிருக்கலாகாது. ஆகையால் நாம் சென்றதற் கிரங்காமல் யாவரையும் ஆபத்துக் குள்ளாக்கும் இடம்பாகரத்தை வெறுத்து, யாவரையும் மகிழ்விக்கும் சித்த சமாதானத்தை இந்தத் தாழ்ந்த நிலைமையிற் றேடக்கடவோம். ஏழைகள் நமது உதவியை நாடாமலே சந்தோஷமாய் வாழ்கின்றார்களே! அப்படி யிருக்க, நாம் ஏன் அவர்கள் உதவியின்றி வாழக் கற்றுக்கொள்ளக் கூடாது? இல்லை, எனது குழந்தைகளே! இந்தக் கணமுதல் சற்றேனுந் தாழ்க்காது, நமது

போலிப் பெருமைகளைக் கைவிட வேண்டும். புத்தியைக் கொண்டால் நமக்குப் போதுமான சுகாநுபவத்திற்கு ஆதாரம் இருக்கிறது. இழந்த செல்வத்தை நிரப்புவதற்கு மன நிறைவாம் வைப்பிலிருந்து போதுமான மட்டும் எடுத்துக் கையாளக் கடவோம்."

என் மூத்த மகன் நன்றாய் வாசித்திருந்தபடியால், அவனை நான் *பட்டணத்துக் கனுப்பத் தீர்மானித்தேன். அங்கவன் வல்லமையால் ஏதாவது சம்பாதித்துத் தன்னையும் எங்களையும் தாங்குவான் என்பது என் எண்ணம். தரித்திர காலத்தில் துன்பத்தைக் கொடுப்பது எது? நேசரும் குடும்பங்களும் பிரிவது தான். அதுவே துன்பகாரணங்களில் முதன்மையானது. பிரிவு நாள் வந்தது. அது தான் முதல் முதல் ஒருவரை விட்டொருவர் நாங்கள் பிரிந்தநாள். முதலிற் றன் தாயிடத்தும் மற்றவர்களிடத்தும் கண்ணீர் கலந்த பற்பல முத்தங்களோடு விடை பெற்று என் மகன் என்னிடத் தாசி பெற வந்தான். இவ்வாசீர் வாதத்தை நான் அவனுக்கென்முழு மனதோடு தந்ததன்றி வழிச் செலவுக்கும் ஐந்துபவுன் வழங்கினேன். இவைகள்தாம் அவனுக்கு நான் இப்போது தரக்கூடிய பிதுரார்ச்சிதம். "தம்பி! நீ பிரயாணத் துக்குத் தயராய் இருக்கிறாய். உனக்கு முன் உன் மூதாதையார் †ஹூக்கர் என்பவர் லண்டன் நகருக்குச் சென்றாற்போல, நீயும் அவ்விடத்திற்கு நடந்துபோக நேரிட்டதே, குழந்தாய்! சாத்மீகரான பிஷப் ஜூவலா அவருக் களித்த இக் குதிரையை நீ இப்போது என்னிட மிருந்து ஒப்புக்கொள்; இதோ, இத்தடியினையும் இப் ‡புத்தகத்தினையும் எடுத்துக் கொள். இது உன் வழிச் சிரமத்தைப் பரிகரிக்கும். இதிலுள்ள இந்த இரண்டு வரிகளும் பத்திலட்சம் பெறும். நான் வாலிபனா யிருந்தேன்; இப்போது வயோதிகனா யிருக்கி

---

* பட்டணம் லண்டன் நகரம்.

† ஹூக்கர்-இவர் ஒரு பெரிய வேதாந்தி இவருடைய தலைவராகிய பிஷப்பினிடத்தி லிருந்து ஒரு காலத்தில் இவர் ஏறிச்செல்ல குதிரை பெற்றார்.

‡ புத்தகம்-வேதபுத்தகம் (பைபிள்)

றேன். இதுவரையில், *உத்தமனை யாவருங் கைவிட்டதில்லை; அவனுடைய சந்ததி ஒரு காலும் சோற்றுக் கலேந்ததில்லை. நீ பிரயாணம் போம்பொழுது, உனக்கிது ஆறுதலேயாயிருக்கட்டும். உன் அதிர்ஷ்டம் எதுவானாலும், தம்பி, நீ நிற்காதே - போ; உன்னை நான் வருஷத்திற்கொருமுறை காணவேண்டும். எப்போதும் மனம் சுத்தமாயிருக்கட்டும். செலவு பெற்றுக்கொள்" என்றேன். அவனுக்கு மானமும் மதியும் இருகண்களாயிருந்தமையால், அவனை நான் உலக நாடகமேடையில் நடிக்க உதவியின்றி ஒன்றியாய்ச் செலுத்தினதற்கு அஞ்சவில்லை. அவன் தவறாமல் நன்றாய் நடிப்பான் என்று எனக்குத் தெரியும் தோற்றாலும் வென்றாலும் ஒரேவிதமா யிருப்பான்.

அவன் சென்றது நாங்கள் செல்வதற்கும் ஒரு வழிகாட்டியாயிருந்தது அந்த நாளும் சின்னாளில் வந்தது. நான் சஞ்சலமின்றி மனவமைதியோடு பன்னாள் வாழ்ந்திருந்த அக்கம்பக்கத்தைவிட்டுப் பிரிவதென்றால் யார்க்குத்தான் கண்ணீர் வராது. வெறுந்தைரியம் ஒன்றுமே அதை அடக்காது. அன்றியும் அதுவரையில் எங்கள் குடும்பம் ஒரு காதத்திற்கு மேல் எங்கும் பிரயாணஞ் செய்ததே யில்லை. அப்படிப்பட்ட குடும்பம் ஏழுகாதம் பிரயாணம் போவதென்றால், எங்களுக்கெல்லாம் என்ன கேடுவருமோ என்று பயம் பெருகிற்று. பிரிவாற்றாமல் ஏழைமக்கள் எங்களை நெடுந்தூரம் பின்தொடர்ந்து வந்திடுங் கூச்சல், அதை இன்னும் அதிகமாக்கிற்று. முதல்நாள் பிரயாணம், கடைசியாக நாங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்திற்கு மூன்றுகாத தூரத்திற் க்ஷேமமாய் கொண்டுவந்து விட்டது. வழியோரத்திலிருந்த கிராமத்தில் சாதாரண சிறு சத்திரமொன்றில் இராத்தங்கினோம் அதிலோர் அறை குடிக்கூலிக்குஅமாத்தி உள் நுழைந்தபோது என் வழக்கம்போல் நான் அந்தச் சத்திரக்காரனை விருந்திற்கழைத்தேன். அவனும் மறுக்காமல் ஒப்புக்கொண்டான்; ஆனால், அவன் என்னோடு

---

* உத்தமன் = புண்ணிய புருஷன்.

கூடிக்குடிப்பதற்கெல்லாம் நானே விலைகொடுத்தாகவேண்டும். ஆகையால் அந்த மறுநாட்காலையில் நான் கொடுக்கவேண்டிய குடிக்கூலித்தொகை முதலியவைகளை அதிகப்படுத்திற்று. என்றாலும், நான் போய்ச் சேரவேண்டிய இடத்தின் அக்கம் பக்கத்தை அவன் அறிந்திருந்தான். முக்கியமாய் இனி என் வீட்டுக்காரராக விருந்த தார்ன்ஹில் என்பவர் அவனுக்கு நன்றாய்த் தெரியும்; அவரும் அவ்விடத்திற்கருகில், சில மைல் தூரத்தில் வசித்தார். இந்தப்பெரிய மனிதரை அவன், சுகானந்தப் பிரியனென்றும், அதைத்தவிர உலகத்தில், வேறொன்றையும் அவர் அறிந்துகொள்ள விரும்புகிறதில்லையென்றும், பெண்பாலரைப் பெரிதும்பாராட்டி விரும்புவதில் அவர் பேர்போனவரென்றும் வருணித்தான். எந்த நற்குண நற்செய்கையும் அவருடைய தந்திரோபாய முயற்சிகளைத் தடுக்காது; அன்றியும் அவரைச் சூழப் பத்துமயில் அளவில் உள்ள எந்த குடித்தனக்காரன் மகளும் அவருடைய மாய வலையிற் சிக்கி மோசம்போகாதவள் இல்லையென்றான். இதைக்கேட்ட நான்மனவருத்தமடைந்தேன் ஆயினும் என் பெண்கள் அப்படி இல்லை. அவர்களுடைய தோற்றம் ஏற்ற மாய்த்தான் இனி அடையும் வெற்றிக்குறியை விளக்கிக்காட்டிற்று. என் மனைவியும் அப்படியே தன் பெண்மக்களின் இயற்கையான நற்குண நற்செய்கைகளையும் அவைகளால் அவர்கள், பிறரைத் தம் வசப்படுத்தக்கூடிய சக்தியையும் மதிரது மெத்த மகிழ்ந்திருந்தாள். இப்படி எங்கள் எண்ணங்கள் சென்றிருந்தபோது, சத்திரக்காரி தோன்றித தன் கணவனை நோக்கி, "இரண்டு நாளாய் இங்கு வந்திருக்கும் அந்த விநோதமான பெரிய மனிதர் பணஞ் சேட்கிறார்; அவர் சொல்கிற கணக்கு எனக்கு ஒன்றுந் தெரியவில்லை" என்றாள். "பணமா, என்ன பணம்" என்று ஆரம்பித்தார் சத்திரக்காரர்; "அது முடியாது; நேற்றுத்தான் அவர் அந்தச் சேவகாதிகாரிக்கு மூன்று * கினி வாங்கிக்கொடுத்து ஒரு கிழப்போர்வீரனை மீட்டார். இல்லாவிட்டால் நாயைத் திரு

*கினி (Guinea) இருபத்தோரு ஷில்லிங்கொண்டது.